# KONGUNADU ARTS AND SCIENCE COLLEGE
(Autonomous)
Coimbatore – 641 029

# MEMORANDUM OF UNDERSTANDING

## OUTCOMES

**Academic Year 2015-2016**

| Name of the Institution/ Industry / Corporate House | Malaya University, Public university in Kuala Lumpur, Malaysia |
|---|---|

**புரிந்துணர்வு ஒப்பந்தம்**



07.12.2015 அன்று கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறைக்கும் மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறைக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் செயலர் மற்றும் இயக்குநர் டாக்டர் சி.ஏ. வாசுகி அவர்களும் மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையின் தலைவர் முனைவர் ஆர். மோகனதாஸ் அவர்களும் கையெழுத்திட்டனர்.

**2015 – 2016**

**தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் மானுட விழுமியங்களும் கலைக்கூறுகளும் பன்னாட்டுக் கருத்தரங்கம்**



கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறையும் மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையும் உலகத்தமிழ் மற்றும் ஜோதிடவியல் மையமும் முனைவர் மா. ஆறுச்சாமி ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து நடத்திய தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் மானுட விழுமியங்களும் கலைக்கூறுகளும் என்னும் பொருண்மையிலான பன்னாட்டுக்

கருத்தரங்கம் 07.12.2015 அன்று கல்லூரியில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் கல்லூரியின் செயலர் மற்றும் இயக்குநர் திருமதி சி.ஏ. வாசுகி அவர்கள் தலைமையுரையாற்றினார். இக்கருத்தரங்கில் கலந்து கொண்ட மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையின் பேராசிரியர் முனைவர் எஸ். குமரன் அவர்கள் கருத்தரங்க நோக்கவுரையாற்றினார். மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையின் தலைவர் முனைவர் ஆர். மோகனதாஸ், பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் வ. ஜெயா, உலகத்தமிழ் மற்றும் ஜோதிடவியல் மையத்தின் தலைவர் சி. மகாலட்சுமி, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் த. முரளீஸ்வரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். 435 பேராளர்கள் எழுதிய ஆய்வுக்கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நான்கு தொகுதிகளாக வெளியிடப்பட்டன. ஆய்வுக்கோவையின் முதல் தொகுதியைக் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் செயலர் மற்றும் இயக்குநர் திருமதி சி.ஏ. வாசுகி அவர்கள் வெளியிட பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் வ. ஜெயா அவர்கள் பெற்றுக் கொண்டார்.

ஆய்வுக்கோவையின் ஏனைய மூன்று தொகுதிகளை முனைவர் ஆர். மோகனதாஸ், முனைவர் எஸ். குமரன், முனைவர் சி. மகாலட்சுமி ஆகியோர் வெளியிட முறையே கல்லூரி முதல்வர் முனைவர் த. முரளீஸ்வரி அவர்களும், பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரியின் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் சு. ஞானப்பூங்கோதை அவர்களும், குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரியின் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் பா. வேலம்மாள் அவர்களும் பெற்றுச் சிறப்பித்தனர். முன்னதாகத் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் க. முருகேசன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். மலேசியாவிலிருந்தும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் முந்நூறுக்கும் மேற்பட்ட பேராசிரியர்களும் ஆய்வாளர்களும் இக்கருத்தரங்கில் பங்கேற்றுப் பயன்பெற்றனர். விழாவின் நிறைவாக சுயநிதிப்பிரிவின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் க. பழனிவேல் அவர்கள் நன்றி நவின்றார்.

**2016 – 2017**

**உ.வே. சாமிநாதையரும் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களும் பன்னாட்டுக் கருத்தரங்கம்**



கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறையும், மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையும், இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையும், ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனமும், முனைவர் மா. ஆறுச்சாமி ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து நடத்திய உ.வே. சாமிநாதையரும் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களும் என்னும் பொருண்மையிலான பன்னாட்டுக் கருத்தரங்கம் 05.12.2016 அன்று கல்லூரியில் நடைபெற்றது. இக்கருத்தரங்கின் தொடக்க விழாவில் கல்லூரியின் செயலர் டாக்டர் சி.ஏ. வாசுகி அவர்கள் தலைமையுரையாற்றினார். இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் வ. மகேஸ்வரன்அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார். மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல்துறைப் பேராசிரியர் முனைவர் சு. குமரன் அவர்கள் கருத்தரங்க நோக்கவுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முதுநிலை ஆய்வறிஞர் முனைவர் ப. மருதநாயகம் அவர்களும் கல்லூரி முதல்வர் முனைவர் த. முரளீஸ்வரி அவர்களும் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாகத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் க. முருகேசன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

இவ்விழாவில் 260 பேராளர்கள் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய ஆய்வுக்கோவை மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டது. கல்லூரிச் செயலர் டாக்டர் சி.ஏ. வாசுகி அவர்கள் ஆய்வுக் கோவையின் முதல் தொகுதியை வெளியிட இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் வ. மகேஸ்வரன் அவர்கள் பெற்றுக் கொண்டார். இரண்டாவது தொகுதியை முனைவர் வ. மகேஸ்வரன் அவர்கள் வெளியிட முனைவர் ப. மருதநாயகம் அவர்கள் பெற்றுக் கொண்டார். மூன்றாவது தொகுதியை மலாயாப் பல்கலைக்கழக இந்தியஆய்வியல் துறைப் பேராசிரியர் முனைவர் சு. குமரன் அவர்கள் வெளியிட தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியின் மேனாள் தமிழ்ப்பேராசிரியர் முனைவர் சு. ஞானப்பூங்கோதை அவர்கள் பெற்றுக்கொண்டார்.

விழாவின் நிறைவில் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் இரா. மணிமேகலை அவர்கள் நன்றி நவின்றார். இலங்கை, மலேயா உள்ளிட்ட அயல்நாடுகளில் இருந்தும் தமிழ்நாட்டின் பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளிலிருந்தும் பேராசிரியர்களும் ஆய்வாளர்களும் பெருந்திரளாகப் பங்கேற்றனர்.

## 2017 –2018

## பன்னாட்டுக் கருத்தரங்கம்



கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை, மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை, ஜெர்மனி தமிழ் மரபு அறக்கட்டளை, சென்னை ந. சுப்புரெட்டியார் 100 அறக்கட்டளை, முனைவர் மா. ஆறுச்சாமி ஆராய்ச்சி நிறுவனம் ஆகியன இணைந்து நடத்திய இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்களும் தமிழறிஞர்களும் என்னும் பொருண்மையிலான பன்னாட்டுக் கருத்தரங்கம் 06.12.2017 அன்று கல்லூரியில் நடைபெற்றது. மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறைப் பேராசிரியர் முனைவர் சு. குமரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார். அவர்தம் உரையில், "மனித வாழ்க்கையை இயக்குவன இலக்கியங்கள் என்றும் இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் புலம்பெயர்ந்த தமிழர்களின் வாழ்வியலை வெளிப்படுத்தின என்றும் குறிப்பிட்டார். மேலும், இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்கள் புலம்பெயர்ந்த தமிழர்களின் இனமான உணர்வு, பெண்ணியச் சிந்தனை, கடந்தகால கண்ணீர், காதல், வீரம், குடும்ப அமைப்பு, அரசியல் நிலை, பண்பாடு ஆகியவற்றைப் பதிவு செய்துள்ளன" என்று குறிப்பிட்டார்.

இவ்விழாவில் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் செயலர் மற்றும் இயக்குநர் டாக்டர் சி.ஏ. வாசுகி அவர்கள் தலைமையுரையாற்றினார். ஜெர்மனி தமிழ் மரபு அறக்கட்டளையின் செயலர் முனைவர் வீ.ரேணுகாதேவி அவர்கள் கருத்தரங்க நோக்கவுரையாற்றினார். இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருதத்துறைத் தலைவர் கலாநிதி ச. பத்மநாபன் அவர்களும் கல்லூரி முதல்வர் முனைவர் வே. பாலசுப்பிரமணியம் அவர்களும் வாழ்த்துரை

வழங்கினார். முன்னதாகத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் க. முருகேசன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

இவ்விழாவில் 263 பேராளர்கள் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய ஆய்வுக்கோவை மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டது. கல்லூரிச் செயலர் டாக்டர் சி.ஏ. வாசுகி அவர்கள் ஆய்வுக் கோவையின் முதல் தொகுதியை வெளியிட மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறைப் பேராசிரியர் முனைவர் சு. குமரன் அவர்கள் பெற்றுக் கொண்டார். இரண்டாவது தொகுதியை ஜெர்மனி தமிழ் மரபு அறக்கட்டளையின் செயலர் முனைவர் வீ.ரேணுகாதேவி அவர்கள் வெளியிட கலாநிதி ச. பத்மநாபன் அவர்கள் பெற்றுக்கொண்டார். மூன்றாவது தொகுதியை ந. சுப்புரெட்டியார் 100 அறக்கட்டளையின் நிறுவனர் முனைவர் சு. இராமலிங்கம் அவர்கள் வெளியிட தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியின் மேனாள் தமிழ்ப்பேராசிரியர் முனைவர் சு. ஞானப்பூங்கோதை அவர்கள் பெற்றுக்கொண்டார்.

விழாவின் நிறைவில் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் க. பழனிவேல் அவர்கள் நன்றி நவின்றார். இலங்கை, மலேயா உள்ளிட்ட அயல்நாடுகளில் இருந்தும் தமிழ்நாட்டின் பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளிலிருந்தும் பேராசிரியர்களும் ஆய்வாளர்களும் பெருந்திரளாகப் பங்கேற்றனர்.

2018– 2019

பன்னாட்டுக் கருத்தரங்கம்



கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை, மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை, திருப்புத்தூர் திருநெறித் திருமன்றம், இலங்கை கொழும்புத் தமிழ்ச் சங்கம், ஆஸ்திரேலியா தமிழ் வளர்ச்சி மன்றம், சென்னை ந. சுப்புரெட்டியார் 100 அறக்கட்டளை, நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம், முனைவர் மா. ஆறுச்சாமி ஆராய்ச்சி நிறுவனம் ஆகியன இணைந்து நடத்திய தமிழ் இலக்கியங்களில் சமயமும் சமூகமும் என்னும் பொருண்மையிலான பன்னாட்டுக் கருத்தரங்கம் 05.12.2018 அன்று கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறைப் பேராசிரியர் முனைவர் சு. குமரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் செயலர் மற்றும் இயக்குநர் டாக்டர் சி.ஏ. வாசுகி அவர்கள் தலைமையுரையாற்றினார். இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருதத்துறைத் தலைவர் **கலாநிதி ச. பத்மநாபன்**, ஆஸ்திரேலியா தமிழ் வளர்ச்சி மன்றத்தின் செயலர் **முனைவர் வீ.ரேணுகாதேவி**, சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகப் பேராசிரியர் **முனைவர் எம்.எஸ். ஸ்ரீலஷ்மி**, பிரான்சு நாட்டைச் சார்ந்த பேராசிரியர் **பிரசாந்த் மோரே** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாகத் தமிழ்த்துறைத் தலைவர் **முனைவர் க. முருகேசன்** அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

இவ்விழாவில் 267 பேராளர்கள் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய ஆய்வுக்கோவை மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டது. கல்லூரிச் செயலர் டாக்டர் சி.ஏ. வாசுகி அவர்கள் ஆய்வுக் கோவையின் முதல் தொகுதியை வெளியிட மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறைப் பேராசிரியர் முனைவர் சு. குமரன் அவர்கள் பெற்றுக் கொண்டார். இரண்டாவது தொகுதியை சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் எம்.எஸ். ஸ்ரீலஷ்மி அவர்கள் வெளியிட கல்லூரியின் முதல்வர் முனைவர் வே. பாலசுப்பிரமணியம் அவர்கள் பெற்றுக்கொண்டார். மூன்றாவது தொகுதியை ஆஸ்திரேலியா தமிழ் வளர்ச்சி மன்றத்தின் செயலர் முனைவர் வீ.ரேணுகாதேவி அவர்கள் வெளியிட தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியின் மேனாள் தமிழ்ப்பேராசிரியர் முனைவர் சு. ஞானப்பூங்கோதை அவர்கள் பெற்றுக்கொண்டார்.

விழாவின் நிறைவில் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் ஜெ. நிஷாந்தானி அவர்கள் நன்றி நவின்றார். இலங்கை, மலேயா, சிங்கப்பூர், பிரான்சு உள்ளிட்ட அயல்நாடுகளில் இருந்தும் தமிழ்நாட்டின் பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளிலிருந்தும் பேராசிரியர்களும் ஆய்வாளர்களும் பெருந்திரளாகப் பங்கேற்றனர்.



| Name of the Institution/ Industry / Corporate House | University of Wyoming, 1000 E University Ave, Laramie, WY 82071, USA |
|---|---|

File Edit View History Bookmarks Tools Help

Discovering India: Notes from t

uwyo-enr3300.blogspot.com/search?updated-max=2016-04-30T18

## Human-elephant conflict: an experience with stakeholders in Southern India

Alanna Elder
August 2015 trip to Coimbatore, India

During the spring of 2015, I took the Environmental Policy, Conservation and Development in India. The class provided a snapshot of environmental challenges in India, and then we chose topics for individual study. I began a literature review of human - elephant conflict and spent the next three months in Laramie getting lost in the library's database; in the vastness of India; in a problem that puzzles land managers around the world. By the end of the semester, I had a paper that I thought was accurate and an understanding that was almost tangible because I dug for it. I doubted, however, whether everything I had read would check out on the ground. In order to confirm that what I wrote was real, I wanted to see humans, elephants, and their overlapping territories in real dimensions.

Thanks to funding from the College of Agriculture's SEND program, and the Haub School for Environment and Natural Resource's Research and Creative Activities grant, I was able to do just that.



*Nicole and Alanna visited a corridor frequently used by the elephants to obtain water*

I traveled to Coimbatore, India in August 2015 with Dr. Sivanpillai, ENR professor Courtney Carlson, and Nicole Reed, a classmate who had researched crop raiding by elephants.

**There we met two faculty members from Kongunadu Arts and Sciences College, Drs. S. Raja (Zoologists) and K. Thenmozhi (Botanist).** They guided us to farms and forest offices and provided insight into elephant behavior and the effects of invasive plants on elephant habitat.

Coimbatore Forest District is a hot zone for the human-elephant conflict in the state of Tamil Nadu, and includes